# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## அரையாண்டுத் தேர்வு - 2011 - 2012

## வளர்தமிழ் 12

சுட்டெண்:........................................................ நேரம்: 180 மணித்துளிகள்

**1) வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, விடைக்கான எழுத்துக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. வீரத்தைப் பற்றிக் கூறும் நூல்

அ) கலித்தொகை ஆ) ஐங்குறுநூறு இ) பழமொழி நானூறு ஈ) புறநானூறு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. புறநானூறு என்ற இலக்கியம்

அ) கடைக் கழக இலக்கியம் ஆ) இடைக் கழக இலக்கியம்

இ) முதற்கழக இலக்கியம் ஈ) 20ம் நூற்றாண்டு இலக்கியம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. கழக இலக்கியங்களில் அகம் எனக்கூறப்படுவது

அ) வீரம் ஆ) போர் இ) காதல் ஈ) உண்மை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. கலிங்கத்துப்பரணி கூறுவது

அ) சோழ மன்னனின் வெற்றியை ஆ) பாண்டிய மன்னனின் வெற்றியை

இ) சேர மன்னனின் வெற்றியை ஈ) அசோக மன்னனின் வெற்றியை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. தமிழர் உயிரினும் மேலாகப் போற்றியது

அ) வீரத்தை ஆ) கொடையை இ) மானத்தை ஈ) செல்வத்தை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. மூவேந்தரின் ஒற்றுமையைச் சிதைத்தவர்கள்

அ) சிங்களவர் ஆ) பார்ப்பனர் இ) ஆரியர் ஈ) களப்பிரர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. தனது மயிர் நீக்கப்பட்டால் வாழாத விலங்கு

அ) அகணமா ஆ) அரிமா இ) கவரிமா ஈ) கரிமா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8) புன்கண் என்பதன் பொருள்

அ) துன்பம் ஆ) இன்பம் இ) கோபம் ஈ) மகிழ்ச்சி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. தொகைகள் மொத்தம்

அ) எட்டு ஆ) நான்கு இ) ஐந்து ஈ) ஆறு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. பாடிய சிறுமி - இதில் வந்துள்ள பாடிய என்பது

அ) வினைமுற்று ஆ) வினையெச்சம் இ) பெயரெச்சம் ஈ) வினையடி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. விசும்பு என்ற சொல்லின் பொருள்

அ) வானம் ஆ) பூமி இ) நிலா ஈ) கதிரவன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. களிறு என்பது

அ) ஆண்புலி ஆ) ஆண்சிங்கம் இ) ஆண்குதிரை ஈ) ஆண்யானை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. இருசுடர் எனக் குறிப்பிடப்படுபவை

அ) வானம், பூமி ஆ) சந்திரன், கதிரவன் இ) வானம், கதிரவன் ஈ) கதிரவன், விண்மீன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. கடல்நீர், ஆற்றுநீர், ஊற்றுநீர் என்பவற்றைப் பெறுவதால் கடல் என அழைக்கப்படும்.

அ) முந்நீர் ஆ) முன்னீர் இ) முன்நீர் ஈ) முந்னீர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. திருக்குறளிலுள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை

அ) 143 ஆ) 123 இ) 133 ஈ) 153

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. எந்த அதிகாரத்தின் பின் ஒழுக்கமுடைமை வைக்கப்பட்டுள்ளது?

அ) பண்புடைமை ஆ) அன்புடைமை இ) அடக்கமுடைமை ஈ) அறிவுடைமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. விழுப்பம் என்ற சொல் குறித்து நிற்பது

அ) அன்பு ஆ) அறிவு இ) மேன்மை ஈ) நன்மை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. பார்ப்பான் என்பது

அ) கரணியப் பெயர் ஆ) இடுகுறிப்பெயர்

இ) கரணிய இடுகுறிப் பெயர் ஈ) இயற்பெயர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. போர்க்களத்தில் புறமுதுகில் புண்பட்டு உயிர்நீத்தல்

அ) வீரமிழத்தல் ஆ) வடக்கிருத்தல் இ) வாகைசூடல் ஈ) கவலையடைதல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. இடும்பை என்றால்

அ) மகிழ்ச்சி ஆ) கோபம் இ) துன்பம் ஈ) அறிவு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. குறள் : அழுக்கா றுடையான்கண் ஆக்கம் போன்றில்லை
______ இலான்கண் உயர்வு

அ) விழுப்பம் ஆ) ஒழுக்கம் இ) வழக்கம் ஈ) பழக்கம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகம். எனக்கூறுவது

அ) சிலப்பதிகாரம் ஆ) தொல்காப்பியம் இ) நன்நூல் ஈ) மூதுரை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. நால்வருணப் பாகுபாட்டை ஏற்படுத்தியவர்கள்

அ) ஆரியர் ஆ) பார்ப்பணர் இ) தமிழர் ஈ) சோழர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. 'கேரளம்' என்று இன்று அழைக்கப்படும் நாடு

அ) சோழநாடு ஆ) பாண்டிய நாடு இ) சேரநாடு ஈ) தமிழ்நாடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. தாசர்கள் என அழைக்கப்பட்டவர்கள்

அ) ஆரியர் ஆ) பழந்தமிழர் இ) சோழர் ஈ) களப்பிரர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. களப்பிரர் என்ற இனத்தவர் தமிழ்நாட்டில் நுழைந்த காலம்

அ) கி.பி 13ம் நூற்றாண்டு ஆ) கி.பி 5ம் நூற்றாண்டு

இ) கி.பி 2ம் நூற்றாண்டு ஈ) கி.பி 1ம் நூற்றாண்டு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. சமணமும் பௌத்தமும் வேரூன்றிய காலம்

அ) அறநெறிக் காலம் ஆ) சோழர் காலம் இ) பல்லவர் காலம் ஈ) கழகக் காலம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. நன்னூலை எழுதியவர்

அ) தொல்காப்பியர் ஆ) பவுணந்தி இ) நாவலர் ஈ) சேனாவரையர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. தொன்மம் என்று குறிப்பிடப்படும் நூல்களில் ஒன்று

அ) வேதம் ஆ) இராமாயணம் இ) சிலப்பதிகாரம் ஈ) நன்னூல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. ஆரியர் தமது பாடல்களில் கடவுளாக வைத்தது

அ) முருகனை ஆ) சிவனை இ) துர்க்கையை ஈ) விட்டுணுவை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

(புள்ளிகள் 30)

## 2) தரப்பட்டுள்ள இலக்கண / மொழியியல் வினாக்களுக்கு விடை தருக.

1. தமிழ் நெடுங்கணக்கிலுள்ள எழுத்துகள் எத்தனை? அவற்றினை வகைப்படுத்துக.

2. வினை எச்சம், பெயரெச்சம், வினைமுற்று இவை ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டுத் தருக.

3. வேற்றுமைகள் எத்தனை? 3ம் வேற்றுமைக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

4. பின்வரும் சொற்களைப் புணர்த்தி எழுதுக

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | வானம் | + | வில் | = | ______ |
| 2. | கால் | + | சங்கிலி | = | ______ |
| 3. | மா | + | பழம் | = | ______ |

5. தனிச்சொல்லியம், கலப்புச்சொல்லியம் இவற்றிற்கு எடுத்துக்காட்டுத் தருக.

(புள்ளிகள் 15)

## 3) தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுக்கு விடைதருக.

1. கல்வி பற்றி மனுநூல் கூறுவது என்ன?

2. ஆரியர் ஊடுருவல் எக்காலப்பகுதியில் தொடங்கியது?

3. எழுவரை வென்ற இளவலின் பெயர் என்ன?

4. யாழ்ப்பாண அரசில் ஆரியம் விரவியமைக்குச் சான்றாக விளங்குபவை யாவை?

5. ஒழுக்க முடையவர்க்கு ஒல்வாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல் - என்ற குறளுக்குப் பொருள் தருக.

(புள்ளிகள் 15)

## 4) பாடலை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

ஒண்டமிழ்த்தாய் சிலம்படியின் முன்னேற்றம்
ஒவ்வொன்றும் உன் முன்னேற்றம்
கண்டறிவாய் எழுந்திரு நீ இளந்தமிழா கண்விழிப்பாய்
இறந்தொழிந்த பண்டை நலம் புதுப்புலமை பழம் பெருமை
அனைத்தையும் நீ படைப்பாய்!
இந்நாள் தொண்டு செய்வாய்- தமிழுக்குத்
துறைதோறும் துறைதோறும் துடித்தெழுந்தே
உயர் தமிழ்த்தாய் இந்நிலத்தில் அடைகின்ற வெற்றி எல்லாம்
உன்தன் வெற்றி
அயராதே எழுந்திரு நீ இளந்தமிழா! அறஞ்செய்வாய்
நாம் அடைந்த துயரத்தைப் பழி தன்னை
வாழ்வினில் ஏற்பட்ட தாழ்மையினைத் துடைப்பாயா?
தமிழ்த்தாய்க்கு வரும் பெருமை உன்பெருமை
வயிற்றுக்கூற்றக் கூழின்றி வாடுகின்றார்
எழுந்திரு நீ இளந்தமிழா- குறை தீர்க்க
உணர்ந்திடுக தமிழ்த்தாய்க்கு வரும் தீமை
உனக்கு வரும் தீமை அன்றோ
பிணி தீர்க்க எழுந்திடு இளந் தமிழா
அணி செய்யும் இலக்கியம் செய்! அறத்தைச் செய்
விடுதலை கொள் அழகு நாட்டில்
பணி செய்வாய் தமிழுக்குத்
துறைதோறும் துறைதோறும் பணி செய்வாய்!

1. எவற்றைச் செய்யும்படி கவிஞர் கேட்கின்றார்?

2. தமிழ்த்தாய்க்கு வரும் திமை யாருக்கு வரும் தீமையாகக் கூறப்படுகின்றது?

3. எதற்குத் தொண்டு செய்யும்படி இங்கு கேட்கப்படுகின்றது?

4. எதையெல்லாம் துடைப்பாயா? என்று கவிஞர் கேட்கிறார்?

5.இப்பாடல் உமது மனதில் எற்படுத்திய மாற்றம் என்ன?

(புள்ளிகள் 10)

5) பந்தியை வாசித்து, கீழுள்ள வினாக்களுக்கு முழுவிடை தருக.

அறிவியல் இன்று உலகையே முன்னேற்றி வருகின்றது. இன்று நம் வாழக்கையை வசதி உள்ளதாக மாற்றி உள்ளது. மின்விளக்குகள், மின்விசிறிகள், சாறு பிழியும் கருவிகள். அது மட்டுமா, அன்று ஏர்பூட்டி கழனி உழுது கையினால் நீர்பாய்ச்சி பல இடர்களின் மத்தியில் வேளாண்மை செய்தனர். ஆனால் இன்றோ அறிவியல் வளர்ச்சியினால் கண்டுபிடிக்கப்பட்ட கருவிகள் மூலம் வேளாண்மை மிகவும் இலகுவாக்கப்பட்டுள்ளது. அம்மையும், பிளேக் நோயும், வாந்திபேதியும் மாந்தர்களைக் கூட்டங்கூட்டமாக அழித்தது அன்று. அறிவியல் வளர்ச்சியினால் இவற்றை ஒழிக்க முடிந்திருக்கின்றது இன்று. போக்குவரத்திலும் தொடர்பாடலிலும் அறிவியல் வியத்தகு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அதனை யாராலும் மறுக்க முடியாது. இவ்வாறு எத்தனை நன்மைகள் இவ்வறிவியல் வளர்ச்சியினால் ஏற்பட்டாலும் அவ் வளர்ச்சியினால் தீமைகளும் ஏற்படுகின்றன என்பதையும் நாம் நினைவிற் கொள்ள வேண்டும். அறிவியல் முன்னேற்றம் மாந்தரின் உடல் உழைப்பைக் குறைத்து விட்டது. வேளாண்மையில் பயன்படுத்தப்படும் வேதியற் (இரசாயனம்) பசளைகளினால் பல நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம். நிலமும் தன் வளத்தை இழந்து விடுகின்றது. பண்டைக் கால மாந்தன் இயற்கையோடு ஒட்டிய வாழ்க்கை வாழ்ந்தான். அதனால் நோயின்றி நீண்ட நாள் வாழ்ந்தான். அறிவியலால் பெருகிவரும் தொழிலகங்களும் போக்குவரத்து உந்துகளும் வளியை மாசுபடுத்துகின்றன. மாசடைந்த சுற்றுப்புறச்சூழல் இயற்கைச் சமநிலையை மாறுபட வைக்கின்றது. இக்காலப் பொழுதுபோக்கு கருவிகளினால் குழந்தைகளும் முதியவர்களும் ஒரே இடத்தில் முடங்கி இருக்க வேண்டிய நிலை. சிந்தனை ஆற்றல்கள் திசைதிருப்பப் படுகின்றன. அறிவியல் முன்னேற்றத்தினால் ஏற்படும் தீய விளைவுகளையும் விளக்குவது அறிவியலே தான். மாந்தன் சிந்தித்துச் செயற்பட்டால் அறிவியலால் ஏற்படும் அழிவுகளைக் குறைத்து அறிவியலை ஆக்கத்திற்குப் பயன்படுத்த முடியும்.

தீதும் நன்றும் பிறர்தர வாரா

1. எவற்றால் குழந்தைகளும் முதியவர்களும் ஒரே இடத்தில் முடங்கி இருக்கின்றனர்?

______________________________

______________________________

2. மாந்தர்களைக் கூட்டங்கூட்டமாக அழித்த நோய்கள் எவை?

______________________________

______________________________

3. அறிவியலால் ஏற்படும் அழிவுகளை எவ்வாறு குறைக்க முடியம் என கூறப்படுகிறது?

______________________________

4. பண்டைக்கால மாந்தன் எத்தகைய வாழ்க்கை வாழ்ந்தான்?

______________________________

______________________________

5. வளி எதனால் மாசடைகிறது?

______________________________

______________________________

(புள்ளிகள் 10)

**6) பந்தியை மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.**

இயற்கை எமக்குக் அளித்த கொடை காடு. காடுகள் எங்களுக்குக் கிடைத்த அன்பளிப்புகள். எங்களில் அதிகமானோருக்கு காடுகளால் என்ன பயன் என்பது புரிவதில்லை. காடுகள் அழிக்கப்படுவதனால் ஏற்படும் தீமைகள் என்ன என்றும் தெரிவதில்லை. ஒன்றினால் கிடைக்கும் நன்மைகள் புரிந்தால் தானே அவை அழிக்கப்படும் போது ஏற்படும் தீமைகள் புரியும். காடுகளில் காணப்படும் மரங்கள் மழை பெய்வதற்கு பெரிதும் துணை புரிகின்றன. அதனால் தான் மரங்களை வெட்ட வேண்டாம் என்று கூறப்படுகிறது. மாறாக மரக்கன்றுகளைப் புதிதாக நாட்ட வேண்டும் என்றும் வலியுறுத்தப் படுகின்றது. இனி மரங்கள் எவ்வாறு எங்களுக்கு மழை கிடைக்க உதவி புரிகிறன்றன என்பதைப் பார்ப்போம்.

கடல்நீர் கதிரவனின் வெப்பத்தினால் ஆவியாகி முகிலாக மாறுகின்றது. அதேபோல மரங்களின் வேர்மூலம் நீர் உறிஞ்சப்பட்டு இம் மரங்கள் சுவாசிப்பதன் மூலம் வெளியேறும் நீர் முகிலாக மாறுகின்றது. இம்மரங்களை நாம் அழிப்பது எங்கள் வாழ்க்கையை நாம் அழிப்பதற்கு முயற்சிப்பது போலாகும். இதனால் தான் மரங்களை வெட்டுவது அரசினால் குற்றமாகக் கருதப்படுகின்றது. மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் தமிழீழத்திலும் மரம் வெட்டுவதற்கு எதிரான சட்டம் வலுவாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

(புள்ளிகள் 05)

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து, 250 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. ஆரிய ஊடுருவல் தமிழர் பண்பாட்டில் ஏற்படுத்திய தாக்கங்கள்.

2. ஒழுக்கமுடைமை என்ற அதிகாரத்தில் ஒழுக்கம் பற்றி வள்ளுவர் கூறியவற்றைத் தொகுத்துத் தருக.

3. புலம்பெயர் நாடுகளில் தமிழர் பண்பாடுகள் பேணப்படுகின்றன. இது பற்றிய உமது கருத்தை விளக்குக.

(புள்ளிகள்15 )